# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF DISTIRCT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT VEPPANTHATTAI**

| | |
|---|---|
| Calendar Case No: | CC.4/2023 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.1 |
| Name : | கந்தசாமி |
| Father's/Husband Name: | சின்னபூவான் |
| Village : | பிள்ளையார்பாளையம் |
| Taluk : | வேப்பந்தட்டை |
| Age : | 65/2023 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 02.11.2023.

**(1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. P. தேன்மொழி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் A1–பழனிசாமி , A2–ரெங்கராஜ், A3– செல்லதுரை ஆகியோர் ஆஜர்)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் Old SSLC படித்துவிட்டு விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் பக்கத்து தோட்டக்காரர்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். கடந்த 17.01.2022 ம் தேதி மாலை 4.30 மணிக்கு நான் பிள்ளையார்புரத்தில் உள்ள எனது தோட்டத்தில் இருந்தேன். என்னுடன் எனது மருமகள் அருள்மொழி இருந்தார். அப்போது ஆஜர் எதிரி பழனிசாமி எனது தோட்டத்திற்கு வந்து இது எனக்கு சொந்தமானது உனக்கு எங்கே உரிமையுள்ளது என்று சொல்லி வாயில் சொல்லமுடியாத அளவிற்கு ஏகதாகமாக பேசி சண்டை வந்துவிட்டது. எதிரி பழனிசாமி நஞ்சை பயிரில் என்னை கீழே தள்ளி என் மீது ஏறி உட்கார்ந்து கையால் எனது விலாஎலும்பு மற்றும் முகத்தில் குத்தினார். எதிரி ரெங்கராஜும், செல்லதுரையும் இவனை அடித்து கொள்ளுங்கள் என்று என்னை

பார்த்து சொல்லி கொண்டிருந்தனர். எனது மருமகள் போட்ட சத்தத்தில் பக்கத்து காட்டுக்காரர்கள் வந்து லதா, ரெங்கராஜ், ஹரிகரன் ஆகியோர் வந்து விலக்கிவிட்டனர்.

(ii) நான் பெரம்பலூர் GH–க்கு சுமார் 6.30 மணிக்கு சிகிச்சைக்கு சேர்ந்தேன். என்னால் மூச்சுவிட முடியாமல் இருந்தது. ஸ்கேன் எடுத்து பார்த்து என்னுடைய விலாஎலும்புகள் முறிந்துள்ளதாக மருத்துவர்கள் சொன்னார்கள். GHல் இருந்தபோது அரும்பாவூர் உதவி ஆய்வாளர் என்னிடம் புகார் வாக்குமூலம் வாங்கினார். அவ்வாறு என்னிடம் காட்டப்பட்ட புகார் வாக்குமூலத்தில் கையொப்பம் செய்தேன். புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 5 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

2(i) மருத்துவமனைக்கு யார் யார் சென்றோம் என்றால், நானும் எனது மகன் முத்துகுமாரும் சென்றோம். மருத்துவரிடம் யார் அடித்தது என்ற விபரத்தை நான் தான் சொன்னேன். மருத்துவரிடம் தெரிந்த ஒருவர் அடித்ததாக தான் சொன்னேன் என்றால் சரியல்ல. பெயரை குறிப்பிட்டு சொன்னேன். எனக்கும் ஆஜர் எதிரிகளுக்கும் ஏற்கனவே காட்டு தகராறு உள்ளது என்றால் சரிதான். இது சம்மந்தமாக நான் காவல் நிலையத்தில் அடிக்கடி புகார் கொடுத்தேன் என்றால் மருமகளை திட்டியதற்காக புகார் கொடுத்தேன். பின்னிட்டு போலிசார் சமாதானம் பேசியதால் புகாரை பெற்றுக்கொண்டேன். அந்த வகையில் எனக்கு விவரம் தெரியும் என்றாலும் அடிக்கடி காவல் நிலையம் செல்வேன் என்றாலும் சரியல்ல. எதிரி பழனிசாமி டிரைவராக வேலை செய்கிறார் என்றால் சரிதான். இரண்டு மாதத்திற்கு ஒருமுறை தான் ஊருக்கு வருவது வழக்கம் என்றால் சரிதான். சம்பவம் நடந்தது பொங்கலுக்கு மறுநாள். நான் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் நஞ்சை வயல் என்றால் சரிதான். நஞ்சை வயல் சேராக இருக்கும் என்றாலும், ஒரு நபர் ஓடி வந்து அடிக்க முடியாது என்றாலும் சட்டையெல்லாம் சேராக தான் ஆகிவிட்டது.

(ii) நஞ்சை வயல் என்று புகார் வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். போலிஸ் விசாரணயில் சம்பவம் நடந்தது நஞ்சை வயல் என்று சொன்னேனா என்றால் சொன்னேன். அவ்வாறு சொல்லவில்லை என்றாலும் வழக்கிற்காக சொல்லியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி ரெங்கராஜும், செல்லதுரையும் என்னை அடிக்கவில்லை என்றால் சரிதான்.

சம்பவத்திற்கு முன்பு எந்த நோய்க்காக சிகிச்சை எடுத்து வந்தேன் என்றால் எந்த நோய்க்காகவும் நான் சிகிச்சை எடுக்கவில்லை. எனக்கு எந்த நோயும் இல்லை. எனது காட்டிற்கு பக்கத்தில் மணி என்பவருக்கு சொந்தமான காடு உள்ளது என்றால் சரிதான். அதை தாண்டி தான் லதா, ரெங்கராஜுக்கு காடு உள்ளது என்றால் சரிதான். அவர்கள் எனக்கு வேண்டியவர்கள் என்றால் எதிரிகளுக்கும் வேண்டியவர்கள் தான் சம்பவம் நடந்ததையும் வந்து பார்த்தார்கள். அவர்கள் எனக்கு மட்டுமே வேண்டியவர்கள் என்றாலும், அதனால் தான் பக்கத்து காடான மணி என்பவர் வந்ததாக சொல்லாமல் மேற்படி நபர்கள் வந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சம்பவ எதுவும் நடைபெறவில்லை என்றாலும், பழனிசாமி ஊரில் இருந்ததை பயன்படுத்திகொண்டு பொய்யாக புகார் வாக்குமூலம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், எனக்கு ஏற்பட்ட காயத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை